

பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகிநகர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (27.12.25) ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் மேயர் ஆர்.பிரியா, அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., மற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.




திருப்பூர் மாவட்டம், திப்பம்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ' நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாம் கழக துணைப் பொது செயலாளர், அமைச்சர் மு. பெ சுவாமிநாதன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் ஆகியோர் நேற்று (27.12.2025) துவங்கி வைத்தனர். உடன் திருப்பூர் மாநகராட்சி 4–ம் மண்டலக் குழுத் தலைவர் இல. பத்மநாபன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை மாவட்டம் – இராஜந்தாங்கல் கிராமத்தில்

### நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த

# மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

திருவண்ணாமலை. டிச.28-

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர், இராஜந்தாங்கல் கிராமத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், இராஜந்தாங்கல் கிராமத்தில் கடந்த 24.12.2025 அன்று காலை சுமார் 11.30 மணியளவில் திருவண்ணாமலையிலிருந்து விழுப்புரம் நோக்கி சென்று கொண்டிருந்த நான்கு சக்கர வாகனம் ஒன்றும், பாண்டிச்சேரியிலிருந்து பெங்களூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தும் எதிர்பாராத விதமாக நேருக்குநேர் மோதிக்கொண்ட விபத்தில் நான்கு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், வேங்கிக்கால், பாலகிருஷ்ணன் நகரைச் சேர்ந்த திருமதி.கனகவள்ளி (வயது 38) க/பெ.சக்திவேல் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மேலும், காயமடைந்து சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த தண்டரை கிராமம், பிள்ளையார் கோவில் தெருவைச் சேர்ந்த திருமதி. பவுனம்மாள் (வயது 75) க/பெ.சீனுவாசன் மற்றும் வேங்கிக்கால், தென்றல் நகரைச் சேர்ந்த திரு.கலைவாணன் (வயது 62) த/பெ.இராஜசேகரன் ஆகிய இருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### தலைமை: சேப்பாக்கம் வி.பி.மணி! திருவல்லிக்கேணி

# வியாபாரிகள் சங்கத்தின் முப்பெரும் விழா - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் விழாப் பேருரை!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – பி.மூர்த்தி – பி.கே.சேகர்பாபு – தயாநிதி மாறன் – நே.சிற்றரசு – ஏ.எம். விக்கிரமராஜா பங்கேற்பு!

சென்னை, டிச.28-

மே 5 வணிகர்களின் உரிமைத் திருநாளை வணிகர் தினம் என தமிழ்நாடு அரசு அறிவித்து அரசாணை வெளியிட்டு வணிகர்களின் தியாகத்திற்கு உயர் அங்கீகாரம் அளித்து மகிழும் நமது தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி கூறும் பெருவிழா, சங்கத்தின் 50-வது ஆண்டு பொன் விழா, சங்க வளர்ச்சிக்கு பெரிதும் துணை நிற்கும் நிர்வாகிகளுக்கு விருதுகள் வழங்கும் திருவிழா என முப்பெரும் விழா இன்று (28.12.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கம் திருவல்லிக்கேணியில் நடைபெறுகிறது.

விழாவிற்கு திருவல்லிக்கேணி வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் சேப்பாக்கம் வி.பி. மணி தலைமை வகிக்கிறார்.

ஏ.குந்தன்மால், எம்.ரவி, வி.கலைச்செல்வம், எஸ்.மாகிள்,என்.எம்.அருண் பாலாஜி, டி.அம்மையப்பன், எம்.காசிப்பாண்டியன், டி.குணசேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு பொன்விழா மலரை வெளியிட்டு மாணவ - மாணவிகளுக்கு புத்தகம் வழங்கி விழா பேருரை ஆற்றுகிறார்.

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.மூர்த்தி, பி.கே.சேகர்பாபு மற்றும் தயாநிதி மாறன் எம்.பி. , மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மேலும் இவ்விழாவில் என்.டி.மோகன், எம்.அமல்ராஜ், டி.சண்முகம், டி.கிருபாகரன், எஸ்.வைத்திலிங்கம், சூலூர் டி.ஆர்.சந்திரசேகரன், எல்.செந்தில்நாதன், டி.செல்லமுத்து, எம்.தமிழ்செல்வம், எம்.ராதா கிருஷ்ணன், டி.பி.பி. வைகுண்டராஜா, இரா.பா.ஞானவேல், பி.பாண்டியராஜன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

நக்கீரன் இதழ் ஆசிரியர் நக்கீரன் கோபால், தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம் ஆகியோர் கே.எஸ்.தங்கவேல் நிறுவனர் விருது எம்.ஜலாலுதீன், எம்.வைத்தியநாதனுக்கும், ஏ.மகாலிங்கம் உழைப்பாளர் விருது எஸ். பி.மோகன், எஸ்.சத்திய மூர்த்திக்கும், எஸ். கே. கிருஷ்ணசாமி பண்பாளர் விருது எம். முகமது ஷா நவாஸ்க்கும், எம்.முஸ்தபா கொடையாளர் விருது கே.பெஞ்சமினுக்கும், டிணேசன் காப்பாளர் விருது டி. கிருஷ்ணமூர்த்திக்கும் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

என்.ஜெகதீசன், எஸ்.பி.ஜெயபிரகாசம், ஆ.ஜெயசீலன், ஆர்.ஜெ.ஜெயந்திலால் செலானி, எஸ்.ஏ.ரமேஷ், ஜி.சந்தனபதி, எஸ். பாபு, எம்.ரவி, எஸ்.குமரவேலு, ஆர்.பி.பால நமச்சிவாயன், எம்.வெங்கடேசன், எம். ஜி.முகைதீன் ஆகியோர் பாராட்டுரை வழங்குகிறார்கள்.

பொன்வண்டு ஜி.ரவி நன்றி கூறுகிறார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 311 வது நாள்!

## எழும்பூர் தெற்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை,டிச.28-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 311 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (27.12.2025), எழும்பூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 58அ, ராம விலாஸ் ஹோட்டல் எதிரில், சூளை பேருந்து நிறுத்தம் அருகில். 2) வட்டம் 58, நேவல் மருத்துவமனை சாலை, பெரிய மேடு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியாராஜன், வி.சுதாகர், சொ.வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, புனிதவதிஎத்திராசன், கே.எஸ்.எம். நாதன், கோ.மணி, ஜி. தாமோதரன், பி.எம். யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, எழும்பூர் தெற்கு/வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல். சுந்தர்ராஜன், தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட திருத்தணி ஒன்றியம் அகூர் கிராமத்தில் 25.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு அங்கன்வாடி மையம் கட்டிடத்தை பயன்பாட்டிற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ திறந்து வைத்து, அங்கன்வாடி குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினார். இதில் ஒன்றிய செயலாளர் என்.கிருஷ்ணன், நிர்வாகிகள் அகூர் மாணிக்கம், ஐயப்பன், விஜய், மனோகரன், கோவேந்தன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி 62அ வட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகள் முன்பும் தலைமைக் கழகத்தின் ஆணைப்படி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பகுதி கழக செயலாளர் மண்டல குழு தலைவர் எஸ்.மதன் மோகன் எம்.சி. முன்னிலையில் புதிய வாக்காளர் சேர்த்தல் பெயர் நீக்குதல் திருத்துதல் சிறப்பு முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வில் வட்டக் கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் பாக முகவர்கள்(BLA2) பாக உறுப்பினர்கள்(BLC) பங்கேற்று பணியினை மேற்கொண்டனர்.

### "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" - இன்று

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாக வாரியாக கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, டிச.28-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல் திட்டத்தின் படி "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" மூலம் இன்று (28.12.2025) சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் குறித்து அமைச்சர் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின் படி இன்று (28.12.2025 ஞாயிற்றுக்கிழமை) சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாக வாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம் வருமாறு:.

**கொளத்தூர் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 68 , பாகம்: 31. இடம்: ஜி.கே.எம். காலனி, 29வது தெரு. மாலை: 4.30 மணி: வட்டம் 68 , பாகம்: 37. இடம்: பூபதி கம்பர் நகர், 6வது தெரு

மாலை: 5.00 மணி: வட்டம் 68 , பாகம்: 121. இடம்: செந்தில் பெரியார் நகர் வெங்கடேசன் சாலை, APC நம்மாழ்வார் அபார்ட்மெண்ட்.

மாலை: 5.30 மணி: வட்டம் 68 , பாகம்: 122. இடம்: சண்முகம் பெரியார் நகர், 15வது தெரு.

**கொளத்தூர் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 64 , பாகம் 13 , இடம்: தயாளு நகர், கொளத்தூர்99.

மாலை: 4.30 மணி: வட்டம் 65 , பாகம் 58 , இடம்: பத்மா நகர், கொளத்தூர்99

மாலை: 5.00 மணி: வட்டம் 65 , பாகம் 81 , இடம்: செல்லியம்மன் நகர் 2வத தெரு, கொளத்தூர்99.

மாலை: 5.30 மணி: வட்டம் 66 , பாகம் 68 , இடம்: நேர்மை நகர், கொளத்தூர்99.

மாலை: 6.00 மணி: வட்டம் 66 , பாகம் 73 , இடம்: பாரதி தெரு, கொளத்தூர்99.

**எழும்பூர் வடக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 77 , பாகம்: 47, 48, 49, 50.

எழும்பூர் தெற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 108அ , பாகம்: 137, 140, 141, 142. இடம்: ஜெகனாதபுரம், சேத்துப்பட்டு.

**திரு.வி.க.நகர் தெற்கு பகுதி**

மாலை: 3.00 மணி: வட்டம் 73அ , பாகம்: 173, 174, 175, 176.

மாலை: 4.00 மணி: வட்டம் 76 , பாகம்: 97, 100, 101.

மாலை: 6.00 மணி: வட்டம் 76அ , பாகம்: 203, 204, 205.

**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 96 , பாகம் 136, 137, 138, 139 , இடம்: ICF கிழக்கு காலனி, 1, 2,3 தெருக்கள், ICF கிழக்கு காலனி 5வது தெரு, ICF மேற்கு காலனி, ICF வடக்கு காலனி.

மாலை: 5.00 மணி: வட்டம் 98 , பாகம் 229, 230, 231, இடம்: காமராஜர் 1, 2, 3, 4, 5வது சந்து, அண்ணா 14வது குறுக்கு தெரு.



**வில்லிவாக்கம் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 104 , பாகம்: 101, 102, 111. இடம்: 13வது மெயின்ரோடு, 15வது மெயின்ரோடு, தங்கம் காலனி 1வது தெரு.

மாலை: 5.00 மணி: வட்டம் 104அ , பாகம்: 118, 128, 134. இடம்: காமராஜர் தெரு, நேரு நகர், என். வி.என்.நகர் 1வது தெரு.

**அம்பத்தூர் வடக்கு பகுதி.**

காலை: 9.30 மணி: வட்டம் 79அ , பாகம்: 114. இடம்: புஷ்பா தெரு

காலை: 10.00 மணி: வட்டம் 81 , பாகம்: 122. இடம்: மவுனசாமி மடம் தெரு

காலை: 10.30 மணி: வட்டம் 85 , பாகம்: 217. இடம்: பிள்ளையார் கோயில் தெரு, கச்சினாங்குப்பம்

காலை: 11.00 மணி: வட்டம் 86 , பாகம்: 238. இடம்: இந்தியன் வங்கி பின்புறம்

காலை: 11.30 மணி: வட்டம் 86 , பாகம்: 239. இடம்: கலைவாணர் நகர், ரேசன்கடை இல்லம்.

**அம்பத்தூர் கிழக்கு பகுதி.**

மாலை: 5.00 மணி: வட்டம் 84அ , பாகம்: 189. இடம்: சாவடி தெரு, கொரட்டூர், சென்னை80.

மாலை: 5.30 மணி: வட்டம் 84அ , பாகம்: 191. இடம்: காக்கை நகர், கொரட்டூர், சென்னை80.

மாலை: 6.00 மணி: வட்டம் 82 , பாகம்: 80. இடம்: பஜனை கோவில் தெரு, மேனாம்பேடு, அம்பத்தூர், சென்னை53.

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அமைச்சர் அறிவித்துள்ளார்.



என் வாக்குச்சாவடி வெற்றிவாக்கு சாவடி பாகவாரியாக பரப்புரை முன்னெடுக்கும் உறுப்பினர்கள் கூட்டம் சாலமங்கலம் ஊராட்சியில் பாகம் எண் 330ல் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. ஆலோசனை வழங்கி உரையாற்றினார். இதில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை. ஆ.மனோகரன், செல்வி சங்கீதா வேலு , பாக நிலை முகவர் வாசுதேவன், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர்கள், ஒன்றிய இளைஞர் அணி மாணவர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தினர்.

### சோழிங்கநல்லூர் மண்டலத்தில் ரூ. 54,50 இலட்சம் மதிப்பீட்டில்

# புதிதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையக் கட்டடம்!

## மேயர் ஆர். பிரியா திறந்து வைத்தார்!

சென்னை,டிச.28-

மேயர் திருமதி ஆர். பிரியா, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, சோழிங்கநல்லூர் மண்டலத்தில், வார்டு-195, ராஜீவ் காந்தி சாலையில் உள்ள வார்டு அலுவலக வளாகத்தில், மேயர் அவர்களின் மேம்பாட்டு நிதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையக் கட்டடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நேற்று (27.12.2025) திறந்து வைத்தார்.

இந்த பல்நோக்கு மையக் கட்டடமானது மேயர் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 54.50 இலட்சம் மதிப்பீட்டில் 1,078 சதுரடி பரப்பளவில் 195ஆவது வார்டு அலுவலக வளாகத்தில் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.அரவிந்த் ரமேஷ், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், , மண்டலக் குழுத் தலைவர் வி.இ.மதியழகன், மாமன்ற உறுப்பினர் திரு.க.ஏகாம்பரம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம், தர்மபுரி ஒன்றியம், வெள்ளாளப்பட்டி ஊராட்சி, நத்தத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கபடி போட்டியினை மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தலைமை ஏற்று துவக்கி வைத்தார். உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு, ஒன்றியச் செயலாளர்கள் என்.ஏ.மாது, டாக்டர் எம்.பிரபு ராஜசேகர், சி.முத்துக்குமார், ஆர்.கண்ணப்பெருமாள், ஜி.வி.கே.சரவணன் பொதுக்குழு உறுப்பினர்கள் லட்சுமணன், மோகன், மற்றும் மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், விளையாட்டு அணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.